**<u>இந்திய உயர் ஸ்தானிகரின் சுதந்திர தினச் செய்தி</u>**
**-<u>கௌரவ சந்தோஷ் ஜா-</u>**

இலங்கையைச் சேர்ந்த எனதன்புக்குரிய சகோதர சகோதரிகளே,

நமஸ்கார், வணக்கம், ஆயுபோவன்!

இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு உங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நல்வாழ்த்துகள். இன்று, மீள்தன்மை கொண்டதும் எழுச்சி மிக்கதுமான இந்தியா தனது சுதந்திரத்தினை கொண்டாடுவதுடன் தனது மக்களின் அபிலாசைகளை நிலைநிறுத்தும் ஜனநாயக நாடாக மட்டுமல்லாமல் அளவிடக்கூடிய வகையிலும் தடுக்க முடியாத வகையிலும் எழுச்சி பெற்று வரும் ஒரு தேசமாகவும்; பல மில்லியன் கணக்கான மக்களை வறுமையிலிருந்து மீட்கும் ஒரு நாடாக மட்டுமல்லாமல் நிலவுக்கு விண்கலங்களை அனுப்பும் நாடாகவும் இந்தியா உள்ளது.

நான்கு திரில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் 6.2 வீத வருடாந்த வளர்ச்சி வீதத்தையும் கொண்டு இன்று இந்தியா உலகின் நான்காவது பாரிய பொருளாதாரமாக காணப்படுகின்றது (IMF, 2025). இந்த வளர்ச்சியானது வெறுமனே புள்ளி விபரங்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல, ஆனால் அதிகரிக்கும் வருமானங்கள், விஸ்தரிக்கப்படும் வாய்ப்புகள், நாடளாவிய ரீதியில் வலுவடையும் பொருளாதார அடித்தளங்கள் ஆகியவற்றை வலுப்படுத்துவதைப் பிரதிபலிக்கின்றது. இந்நிலையில், ஜேர்மனிக்கு முன்சென்று 2028 ஆம் ஆண்டில் இந்தியா மூன்றாவது பாரிய பொருளாதாரமாக வளர்ச்சி அடையும் என எதிர்வுகூறப்படுகின்றது.

இந்த வளர்ச்சிக்கு இந்தியாவினுடைய அனைத்தையும் உள்ளடக்கிய தன்மை மிகவும் முக்கிய காரணியாக காணப்படுகின்றது. உலக வங்கியின் தரவுகளுக்கு அமைவாக 2011-12 காலப்பகுதியில் 27.1 வீதமாக காணப்பட்ட இந்தியாவின் வறுமை நிலையானது 2022-23 காலப்பகுதியில் 5.3 வீதமாக மிகவும் கணிசமான அளவில் குறைவடைந்துள்ளது. இதேவேளை சமத்துவமின்மை போக்கும் கணிசமான அளவில் குறைவடைந்துள்ளது. கினி சுட்டெண்ணின் (Gini Index) பிரகாரம் உலகளாவிய ரீதியில் சமத்துவ தன்மையினை கொண்ட நான்காவது நாடாக இந்தியா 25.5 புள்ளிகளுடன் பட்டியலிடப்பட்டிருக்கும் அதேவேளை மிதமான மிகவும் குறைவான சமத்துவமின்மை காணப்படும் பிரிவில் உள்ளது.

இந்த பெறுபேறுகள் ஆணித்தரமான கொள்கை மறுசீரமைப்புகள் மற்றும் முறையான நிலை மாற்றங்கள் காரணமாகவே ஏற்பட்டிருந்தன. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி (GST) மற்றும் யுபிஐ (Unified Payments Interface) போன்ற திட்டங்கள் இந்திய பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தியதென்றே குறிப்பிட முடியும். அதுமட்டுமல்லாமல் ஆயுஷ்மான் பாரத் மற்றும் ஜன் தன் யோஜனா போன்ற சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் மில்லியன் கணக்கான தரப்பினருக்கு சுகாதார மற்றும் நிதி

ரீதியான திட்டங்கள் சென்றடைவதனையும் மிகவும் நலிவானோருக்கு வளர்ச்சி சென்றடைவதனையும் உறுதிப்படுத்துகின்றன.

சனத் தொகையின் 65 வீதமானோர் 33 வயதுக்கு குறைவானதாக காணப்படும் நிலையில், அபிவிருத்தி அடைந்த நாடு அல்லது வளர்ந்த பாரதம் என்ற நிலையினை 2047 ஆம் ஆண்டில் அதாவது சுதந்திரத்தின் நூற்றாண்டு கொண்டாடப்படும் நிலையில் இந்தியா அடைய வேண்டும் என்ற கொள்கைக்கு ஆதரவாக குறித்த சனத்தொகையினரிடமிருந்து பிரதிபலன்கள் கிடைக்கப்பெறுகின்றன.

இந்தியாவின் வளர்ச்சி கதையானது அதனுடைய ஸ்திரத்தன்மையிலும் தங்கி உள்ளது. இந்தியா தற்போது தனது மின்சக்தியில் 50 வீதமானவற்றை படிமம் அல்லாத எரிபொருள் மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்கின்றது. பாரிஸ் உடன்படிக்கையின் கீழ் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளின் அடிப்படையில் நிர்ணயித்த இலக்கை விட ஐந்து வருடங்கள் முற்கூட்டியே இந்த முக்கியத்துவம் மிக்க இலக்குகள் எட்டப்பட்டுள்ளன. இந்தியாவைப் பொறுத்தவரையில் பசுமை சக்திக்கான நிலைமாற்றமானது வளர்ச்சிக்கான ஒரு மாற்று அல்ல, மாறாக அது வளர்ச்சியை வலுவாக்கும் சமாந்தரமான பாதையாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினம் இலங்கைக்கான தொடர்பினையும் கொண்டிருக்கின்றது, இலங்கையின் சுதந்திர பயணமும் இந்தியாவுடன் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். நமது இரு நாடுகளும் நமது மக்களுக்கான சிறந்த வாழ்க்கையினை வழங்குவதனை இலக்காகக் கொண்டு ஜனநாயகத்தை நோக்கிய உறுதியான பாதையில் ஒன்றாக பயணித்திருந்தன. இந்தியாவும் இலங்கையும் நமது பகிரப்பட்ட காலனித்துவ வரலாற்றினை கொண்டிருக்கும் ஆழமானதும் வரலாற்று ரீதியானதுமான பிணைப்புகளை பகிர்கின்றன. இவ்வாறான பிணைப்புகளே நம்மை நாகரீக இரட்டையர்களாக உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆழமாக வேரூன்றிய உறவிலிருந்தே இந்திய இலங்கை உறவுகள் அதன் வலிமையினையும் துடிப்பினையும் பெறுகின்றன. கடல் மார்க்கமாக மிகவும் கிட்டிய அயல் நாடாக இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் பிராந்தியம் முழுவதுக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பரஸ்பர மற்றும் பூரணமான மேம்பாடு என்ற கோட்பாடு (MAHASAGAR) ஆகியவற்றில் இலங்கைக்கு விசேட இடம் வழங்கப்பட்டுள்ளது

இந்தியாவும் இலங்கையும் பரஸ்பரம் வழங்கும் முன்னுரிமையானது, இலங்கை ஜனாதிபதி அவர்களால் டில்லிக்கும் இந்திய பிரதமர் அவர்களால் இலங்கைக்கும் மேற்கொள்ளப்பட்டிருந்த அண்மைய விஜயங்களில் பிரதிபலித்திருந்தது. ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்கள் பதவியேற்றபின்னர் தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்திற்காக டில்லியை தெரிவு செய்திருந்த அதேசமயம், பிரதமர் நரேந்திர மோடி அவர்களையே தனது பதவிக்காலத்தில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட முதல் வெளிநாட்டுத் தலைவராக வரவேற்றிருந்தார். 2025 ஏப்ரலில் பிரதமர் மோடி அவர்கள் கொழும்புக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது குறிப்பிட்டதைப் போன்று,

*“இலங்கையின் உண்மையான நட்பு நாடாக தனது கடமைகளை இந்தியா பெருமையுடன் நிறைவேற்றியுள்ளது. 2019-ல் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலாக இருக்கலாம் அல்லது கொவிட் பெருந்தொற்று காலப்பகுதியாக இருக்கலாம், இல்லாதுவிடில் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாக இருக்கலாம் இச்சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு நெருக்கடி நிலையின் போதும் இலங்கை மக்களுடன் நாம் உறுதியாக துணை நின்றோம்”*

இந்தியாவுக்கும் இலங்கைக்கு இடையிலான உறவுகள் பரஸ்பர நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தினை அடிப்படையாகக் கொண்டவை. கடந்த ஆறு மாத காலப் பகுதிக்கு மேலாக, இருதரப்பு வர்த்தக மற்றும் முதலீட்டு செயற்பாடுகளை மேம்படுத்தல், தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளில் ஒத்துழைப்பு, இரு நாடுகளிலும் மக்களிடையிலான உறவுகளை மேம்படுத்தல், பரஸ்பரம் நன்மை பெறக்கூடிய இணைப்பு திட்டங்களை மேம்படுத்துதல், இலங்கை அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்ட துறைகளில் நன்கொடை அடிப்படையிலான உதவிகளை வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய எமது இருதரப்பு உறவுகளின் பல்வேறு கோணங்களிலும் நாம் இலங்கை அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றி வருகின்றோம். பல்வேறு முனைகளிலும் இலங்கையுடனான உறவுகளில் கடன்களை அடிப்படையாகக் கொண்ட அணுகு முறையில் இருந்து முதலீட்டினை அடிப்படையாகக் கொண்ட பங்குடைமையை நோக்கி இந்தியா தற்போது உறுதியான மாற்றத்தினை முன்னிறுத்தி வருகின்றது இலங்கை மீது கடன்களை சுமத்தாமல் இலங்கை மக்களுக்கு பொருளாதார அபிவிருத்தியினை உறுதிப்படுத்துவதே இந்த அணுகுமுறையின் மைய இலக்காகும்.

இலங்கையின் பாரிய வர்த்தக பங்காளராகவும், வெளிநாட்டு முதலீடுகளில் முன்னணி ஆதாரமாகவும், சுற்றுலா பயணிகளில் பாரியளவான பங்களிப்பினை வழங்கும் நாடாகவும் இந்தியா காணப்படுகின்றது. நமது அபிவிருத்தி பங்குடைமையானது பரந்தளவானதும் மக்களை இலக்காகக் கொண்டதுமாகும். இவ்வருடம் ஏப்ரலில் பிரதமர் மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது அறிவிக்கப்பட்ட திட்டங்களான தம்புள்ளை வெப்பநிலை கட்டுப்பாட்டு களஞ்சிய தொகுதி, ரயில்வே திட்டங்கள், சம்பூர் மின் சக்தி திட்டம், மத நிறுவனங்களுக்கான கூரைகளில் பொருத்தப்படும் சூரியக்கல மின்சக்தி திட்டங்கள், அநுராதபுரத்தின் புனித நகர் வளாகத்துக்கான உதவி, திருக்கோணேஸ்வரம் ஆலயம் மற்றும் சீதை அம்மன் ஆலயம் ஆகியவற்றுக்கான உதவிகள் போன்றவை இந்த அணுகு முறையினை சுட்டிக்காட்டுகின்றன.

வீடமைப்பு, சுவசெரிய அம்புலன்ஸ் சேவை, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையம், இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள திட்டம், திறன் விருத்தி திட்டங்கள் போன்ற செயல்திட்டங்கள் ஊடாக இந்தியா தொடர்ந்து மக்களை இலக்காகக் கொண்ட அபிவிருத்தியை நோக்கி செயல்பட்டு வருகின்றது. இவ்வாறான திட்டங்கள் அனைத்தும் இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமையுடன் ஒத்திசைந்திருக்கும் அதேவேளை நேரடியாகவும் அர்த்தமுள்ள வகையிலும் வாழ்வினை மேம்படுத்துவதனையும் இலக்காகக் கொண்டவையாகும்.

புவியியல் அமைவிடம் காரணமாக மட்டுமன்றி, பகிரப்பட்ட அபிலாசைகள் மற்றும் ஒரு பொதுவான எதிர்காலம் ஆகியவற்றாலும் இந்தியாவும் இலங்கையும் மிகவும் ஆழமாக பிணைக்கப்பட்டுள்ளன. நமது விதிகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்தவை ஆகும். இந்தியா வளர்ந்து வரும் நிலையில் குறிப்பாக இலங்கை உட்பட எமது அயலுறவுகளுடன் நம்பிக்கை, கௌரவம், பரஸ்பர நலன் ஆகியவற்றின் மீது கட்டி எழுப்பப்பட்ட பங்குடைமைகள் ஊடாக எமது வளர்ச்சியினை பகிர்ந்து கொள்வதை உறுதிப்படுத்துவதில் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். நமது சொந்த முன்னுரிமைகளுடன் இலங்கை உட்பட தெற்குலகின் நலன்களை பிணைத்து அவற்றுக்காக இந்தியா வலுவாக குரல் கொடுத்து வருகின்றது.

இந்த சுதந்திர தினத்தில் இந்தியா இலங்கை இடையிலான ஒரு வலுவான பங்குடைமை, பொதுவான அமைதி, முன்னேற்றம் மற்றும் செழுமை ஆகியவற்றின் எதிர்காலத்திற்கான எமது உறுதிப்பாட்டினை புதுப்பிப்போம்.

ஜெய் ஹிந்

நன்றி, ஸ்துதி, தன்யாவத்.